பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,
சென்னை–06
ந. க. எண்.037970/அ3/இ1/2024, நாள். 15.07.2024

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு பொதுப்பணி / அமைச்சுப்பணி அனைத்து வகைப் பணியாளர்களுக்கான மாறுதல் – 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரே அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கு மாறுதல் / விருப்ப மாறுதல் வழங்குதல் – GOOGLE MEET LINK – மூலம் கலந்தாய்வு நடத்திடுதல் – கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடுதல் – தொடர்பாக

www.Padasalai.Net

பார்வை:
1. அரசாணை எண். 149, பள்ளிக்கல்வி (SE1(1), துறை, நாள். 01.07.2024
2. சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) ந.க.எண்.040524/அ3/இ1/2024 நாள் 10.07.2024, 12.07.2024 மற்றும் 13.07.2024.

------

பார்வை (1) இல் காணும் அரசாணையின் அடிப்படையில் 30.06.2024 அன்றைய நிலையில், மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஒரே பணியிடத்தில் பணிபுரியும் மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள், கண்காணிப்பாளர்கள்/ பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்கள் / உதவியாளர்கள்/ இளநிலை உதவியாளர்கள்/ சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோர்களுக்கு கலந்தாய்வு நடத்திட ஏதுவாக பார்வை 02 இல் காணும் 13.07.2024 நாளிட்ட செயல்முறைகளில் கூடுதல் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டது.

இந்நெறிமுறைகளில் பத்தி–2 இல் வரிசை எண் 2 மற்றும் 7 –க்கு கீழ்கண்டவாறு திருத்தம் செய்து ஆணையிடப்படுகிறது.

த.பி.பா.

 www.Padasalai.Net

2. மூன்றாண்டு கட்டாய மாறுதலுக்கு மாவட்டத்திற்குள் தகுதி பணியாளர்களின் பணிமூப்பு (Seniority), அவர்கள் தற்போதைய பதவியில் முதலில் பணியில் சேர்ந்த நாளினைக் கணக்கில் கொள்ள வேண்டும். தற்போது பணிபுரியும் அலுவலகத்தில் பணியில் சேர்ந்த நாளினைக் கணக்கில் கொள்ளக் கூடாது. (Cadre seniority and not the station seniority)

7. பணியாளர்கள் ஏற்கனவே பதவி உயர்வு / விருப்ப மாறுதல் பெற்று நாளது தேதி வரை பணியில் சேராமல் இருந்தால் அவர்கள் மாறுதல் / பதவி உயர்வு பெற்றுள்ள பணியிடங்களைக் காலிப்பணியிடங்களாக காண்பிக்கக்கூடாது.

பார்வை (1)ல் காணும் அரசாணை மற்றும் (2)ல் காணும் இவ்வியக்ககச் செயல்முறைகளில் தெரிவித்துள்ள நெறிமுறைகளை தவறாது பின்பற்றி அந்தந்த நாட்களில் கலந்தாய்வு எவ்வித புகாருக்கும் இடமின்றி நன்முறையில் கலந்தாய்வினை செவ்வனே செயல்படுத்திட அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தலாகிறது.

15/07/24

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

15/07/2024

பெறுநர் :-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (மின்னஞ்சல் வழியாக)

நகல் :-

பணிந்தனுப்பப்படுகிறது:

1. உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை 6.
2. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை 6.
3. இயக்குநர், தனியார்பள்ளிகள் இயக்ககம், சென்னை 6.
4. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
5. இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை -6.
6. மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை 6.
7. இவ்வியக்கக அ2 / அ4 பிரிவிற்கு
8. EMIS ஒருங்கிணைப்பாளர்
   மாநில திட்ட இயக்ககம், சென்னை-06.